

காச நோய் தீர்க்கும் கற்பூரவள்ளி............................பக்-1



உள்ளூர் படிமரச் செய்கையாளருக்கு ஊக்கம் தருகிறது "ஜசுபி" தொழிற்சாலை யாழ்.குடாநாடு...............................பக்-2



வறுமைப்பட்ட பெண்களிற்கிடையே பொருளாதாரத் தலைமைத்துவத்தை ஏற்படுத்துதல். பக்-3


வெளியீடு :-02 இதழ் :-02 பெப்ரவரி :- 2009

# மனிதாபிமானம்

மனித நேயத்திற்காக ஒன்றுபடுவோம்

## காச நோய் தீர்க்கும் கற்பூரவள்ளி

மூலிகைகளைத் தேடி நாம் செல்ல வேண்டாம். அனேக மூலிகைகள் நம் அருகிலேயே இருக்கின்றன. ஆனால் நாம்தான் அவற்றைக் கண்டு கொள்வதில்லை. சிலர் வீடுகளில் அழகுக்காக பல செடிகொடிகளை வளர்க்கின்றார்கள். அவற்றில் துளசி, கற்பூரவள்ளி, சித்தரத்தை, சிறியாநங்கை என பல அடங்கும். சிலருக்கு இவற்றின் மருத்துவக் குணங்கள் தெரிந்திருக்கும் சிலர் அறிந்திருக்கமாட்டார்கள்.

"வீடுகளில் தொட்டிகளில் வளர்க்கப்படும் கற்பூர வள்ளியின் மருத்துவக் குணங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்".

இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மிகுந்த பலனளிக்கக் கூடியது. இவை வீடுகளில் அதிகம் வளர்கிறது. இதன் இலைகள் காரம் கலந்த சுறுசுறுவென்ற சுவையுடன் இருக்கும். இதன் இலை தடித்து காணப்படும்.

### குழந்தைகளுக்கு

சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி சளிப்பிடித்துக் கொண்டு இருமல் உண்டாகும். இது அவர்கள் உடல் நிலையை பல்வேறு வகைகளில் பாதித்து பல நோய்களை உண்டாக்கி விடும். கற்பூரவள்ளியின் இலையைச் **"சாறெடுத்து அதனுடன் பனங்கற்கண்டு கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் இருமல் நீங்கும். மேலும் குழந்தைகளுக்கு உண்டாகும் மந்தமும் விலகும்".**

### சளித் தொல்லை நீங்க

மூலத்தில் சூடு இருந்தால் மூக்கினில் நீர் வரும் என்பது சித்தர் வாக்கு. மூக்கில் நீர் வடிந்து அது சில நாட்களில் சளியாக மாறி இருமலை ஏற்படுத்தி விடும். இவர்கள் கற்பூரவள்ளி இலையின் **"சாறை எடுத்து தேன் கலந்து அருந்தி வந்தால் சளி மற்றும் இருமல் தொல்லையிலிருந்து விடுபடலாம்".**

### புகை பிடிப்பவரா.......?

**"புகை நமக்குப்பகை என்ற வாசகம் போட்டு இருந்தும் புகைப்பவர்கள் எண்ணிக்கை குறைந்த பாடில்லை".** அரசு பொது இடங்களில் புகைபிடித்தலுக்குத் தடை பிறப்பித்தும் அதற்கு சரியான பலன் கிடைக்கவில்லை. புகையினால் ஏற்படும் பாதிப்புகளைப்பற்றி போதிய விழிப்புணர்வு ஏற்பட்டும் இந்நிலை மாறவில்லை. புகைப்பவர்கள் அதிகம் நுரையீரல் நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இதே நாளடைவில் புற்றுநோயாக மாறுகின்றது. இவர்கள் **"கற்பூரவள்ளி இலையினை சாறெடுத்து அதை நன்கு சுண்டக் காய்ச்சி பாதியான அளவு எடுத்து வடிகட்டி அருந்திவந்தால் புகையினால் உண்டான பாதிப்புக்களிலிருந்து விடுபடலாம்".**

### வியர்வைப்பெருக்கி

சிலருக்கு வியர்க்காமல் உடம்பு முழுவதும் படிவம்போல் காணப்படும். நமது உடலில் தோலில் பல கோடி துளைகள் உள்ளன. இவற்றின் மூலம்தான் வியர்வை சுரப்பிகள் வியர்வையை வெளியேற்றுகின்றன. இந்த வியர்வையின் மூலம் உடலில் உள்ள அசுத்த நீர் வெளியேறுகின்றது. **"இந்த வியர்வை நன்கு வெளியேறவும், வியர்வைச் சுரப்பிகள் நன்கு செயற்படவும் கற்பூரவள்ளியின் இலையை நிழலில் காய வைத்து பொடி செய்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் வியர்வை பெருகும்".**

### காசநோய்

காசநோயால் உண்டான பாதிப்புகள் குறைய கற்பூரவள்ளி சிறந்த மருந்தாகும். கற்பூரவள்ளி இலையை சாறு எடுத்து அதனுடன் தேன் கலந்து அருந்தி வந்தால் காச நோயால் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும். கற்பூரவள்ளி ஒரு கிருமி நாசினியாகும். கற்பூரவள்ளி செடியை **"தென்னை மரத்தைச்சுற்றி நட்டு வைத்தால் எந்த விதமான பூச்சிகளையும் அண்ட விடாது".** சித்தர்கள் இதனை கற்பக விருட்சத்துடன் ஒப்பிடுவார்கள். இதனால் கூட இதற்கு கற்பூரவள்ளி என்று பெயர் வந்திருக்கலாம். வீட்டைச் சுற்றி கற்பூரவள்ளியை வளர்த்தால் வி'ப்பூச்சிகள் தொல்லையிலிருந்து தப்பலாம். நாட்டைப் பாதுகாக்கும் போர்ப் படை வீரர்களைப் போல் மனிதனை இந்த கற்பூரவள்ளி பாதுகாக்கிறது. நாமும் நம் வீட்டில் கற்பூரவள்ளியை வளர்த்து அதன் பயனைப் பெறுவோம்.

தகவல் : DRC Unit
CHA- மன்னார்

# உள்ளுர் பழமரச் செய்கையாளருக்கு ஊக்கம் தருகிறது –"ஜசுபி" தொழிற்சாலை

**யாழ் குடாநாட்டு பழவகைகளுக்கு மிகவும் பிரசித்தமானது. மாம்பழம், திராட்சைப் பழம், வாழைப்பழம், எலுமிச்சம் பழம் எனப்பல்வேறு பழவகைகளும் இங்கு தாராளமாக உள்ளன. யாழ் குடாநாட்டின் காலநிலை, பௌதீக வளங்கள், மக்களின் விடாமுயற்சி என்பன பழ உற்பத்திக்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. அன்று தொட்டு இன்றுவரை தென்னிலங்கையிலே யாழ்ப்பாணத்து மாம்பழத்துக்கு நல்ல மதிப்பு "யப்பானெ அம்ப" என சிங்கள மக்களால் விரும்பி வாங்கி சுவைக்கப்படுபவை யாழ் குடாநாட்டு மாம்பழங்களே!**



**விவசாயிகளின் உற்பத்திக்கு ஊக்கம் கொடுத்து சந்தைவாய்ப்பு, வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் பழங்களை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடும் "ஜசுபி"** எனப்படும் பழரசத்தொழிற்சாலை 2002ஆம் ஆண்டு உடுவிலில் முன்னாள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை செயலாளர் திரு. ஆ.மகாலின்கம் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு இன்றைய குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளிலும் பழமரச் செய்கையாளருக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது. பட்டினிக்கெதிரான நிறுவனம், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் என்பவற்றின் கூட்டிணைப்பில் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை சுன்னாகம் பலநோக்குகூட்டுறவுக் சங்கத்தினால் நிர்வாகிக்கப்படுகிறது. ஆம் அதுதான் ஜசுபி – JACHUFI – Jaffna, உாரயெடயஅ குசரவை ஐனெரளவசல.

## மூலப்பொருக்களை பெறுதல்.

யாழ் குடாநாட்டின் விவசாய உற்பத்திகளைக் பெரும் மூலதாரமாகக் கொண்டு சுகாதார முறையில் அதி உன்னதமாக தமது உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள் விவசாயிகளிடமிருந்து உற்பத்திக்குப் பெற்றுக்கொள்ளும் பழங்களை கொள்வனவு செய்யும் போது தரக்கட்டுப்பாடு நியாயவில், பொருளின் தரம் என்பன கருத்திற் கொண்டே கொள்வனவு செய்யப்படுகின்றன. இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் பழங்கள் அந்த அந்தக் காலங்களில் அளவுக்கதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்ட அடுத்த பருவம் (Season) வரும் வரையும் தகுந்த தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு பாதுகாத்து வைக்கப்படுகிறது. இவ்வாறு பாதுகாத்து வைப்பதனால் **நியாயமான விலை, விலைத்தளம்பல் பொருளின் தரம் போன்றவற்றைச் சீர்செய்து நுகர்வோருக்கு கொடுக்கிறார்கள்.** இப்பழங்களைச் சேகரித்துச் சாறாக்கி வைப்பதன் மூலம் பழங்கள் அற்ற காலங்களிலே மக்கள் பதப்படுத்திய உணவாக 'ஜசுபி' தயாரிப்புக்களைக் கேட்டு வாங்கும் தன்மையை ஏற்படுத்தி உள்ளார்கள்.

## ஜசுபி தயாரிப்புக்கள்.

நெல்லிரசம், பழக்கலவைக் கோடியல், திராட்சைக் கோடியல், அன்னாசிக் கோடியல், பழக்கலவை ஜாம், விளாம்பழ ஜாம், ஸ்ரோபரி ஜாம், தக்காளி சோஸ், மிளகாய் சோஸ், மிளகாய் சட்ணி, தேசி ஊறுகாய், மோர் மிளகாய்.

## உற்பத்தி நடைமுறைகள்.

உற்பத்திக்கு தேவையான நீரைச் சுத்தப்படுத்துவதற்கென தனியான இயந்திரம், பழம் பிழியும் இயங்திரம், பழப்பாகு காய்ச்சும் இயந்திரம் போன்றவற்றின் செயற்பாடுகளால் தமது உற்பத்திகளை வெற்றிகரமாக உற்பததி செய்கின்றனர். உற்பத்திக்குத் தேவையாக தூய நீர் பெறுவதற்காகத தண்ணீர் சுத்திகரிக்கும் கருவி – Water Purification Plant இயக்கப்படுகிறது. பழங்களிலிருந்து சாற்றை சூழ் நிலையில் பிரித்தெடுப்பதற்கு பழம் பிழியும் இயந்திரம் பயன்படுத்தப் படுகிறது. இவ்வாறு பெற்ற சாற்றுடன் ஏனைய

மூலப்பொருள்களைக் கலந்து உற்பத்தியில் தொற்றுக்கள் ஏதுமற்ற கலவையாக (Disinafected mixture) பெரிய பாத்திரம் (PAN) ஒன்றில் சேர்க்கப்பட்டு நிராவி மூலம் காய்ச்சப்பட்டு (SMS) சேர்க்கப்பட்டு பலகாலம் கெட்டுப்போகமலிருக்க சேமிக்கப்படுகிறது. ஜசுபியில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் நீராவியின் தொழிற்பாடுகள் கொண்டே உற்பத்தி செய்யப்படுகின்றன. நீராவியை உற்பத்தி செய்யும் பொயிலர் (Boiler) இயந்திரம் கடின நீரை மென்னீராக்கி அனுப்பப்படுகிற நீரைக்கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ஈயம், அலுமினியம் போன்றவற்றினால்

# வறுமைப்பட்ட பெண்களிற்கிடையே பொருளாதாரத் தலைமைத்துவத்தை ஏற்படுத்துதல்

இச் செயற்பாடுகளுக்கு அனுசரனையாளர்கள்:- குழு SDOO, OXFAM, IOM, அரச கால்நடைத்திணைக்களம், அரசகூட்டுறவுத் திணைக்களம்

அறிமுகம் –

வவுனியா கோமாதா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம். சாஸ்திரிகூழாங்குளம், ஈச்சங்குளம், கல்மடு, மரக்காரம்பளை, ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களை உள்ளடக்கி 01 – 09 – 2008 அன்று உருவாக்கப்பட்டு இதில் 180 பெண்களும் 31 ஆண்கள உள்ளடக்கி 211 அங்கத்தவர்களுடன் 05 – 02 – 2007 அன்று கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு தனது செயற்பாடகளை மேற்கொண்டு வருகின்றது.







## நோக்கம் –

வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் விவசாயத்திலும் , உள்ளூர்கால்நடை வளர்ப்பிலும் அதிகளவு ஈடுபட்டு வருவதால் எதிர்பார்த்த வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர். இதனால் உயர்உற்பத்தியை செய்யக்கூடிய ஆரோக்கியமான நல்லின கால்நடைக் குடித்தொகையை உருவாக்கி பாலுக்குரிய உயர்ந்த விலையை பெற்றக்கொடுத்து கால்நடைகளுக்கு தேவையான உயர்பசுந்தீவனத்தை (ஊழ3) அறிமுகப்படுத்தி பெண்களின் பொருளாதார தலைமைத்துவத்தை ஊக்குவித்து இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பை உள்ளூரில் அதிகரிக்கச் செய்வதோடு மக்களின் வறுமையை ஓரளவு குறைத்து வெண்மைப் புரட்சியை ஏற்படுத்துதல்.

## செயற்பாடுகள் –

- நல்லின பசு,காளை மாடுகளை வழங்குதல்.
- கால்நடைகளுக்கான உயர்பசுந்தீவனங்களை வழங்குதலும், மேம்படுத்தலும். பண்ணையாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்
- கால்நடைகளுக்கான முதலுதவி நடவடிக்கை மேற்கொள்வதுடன் தடுப்பு மருந்து ஏற்றும்
- செயற்பாட்டை மேற்கொள்ளல்.
- பால் கொள்வனவு விற்பனை நடவடிக்கை
- பால் பொருள் உற்பத்தி மேற்கொள்ளல்
- கால்நடைகளுக்கான மருந்துப்பொருள் விற்பனை.
- கூட்டெரு உற்பத்தியும் விற்பனையும்
- கால்நடைகளுக்கான மாதிரி உணவு தயாரித்தலும் விநியோகித்தலும். (வைக்கோள் தீவனம், கனியுப்புக்கல், யூரியாபதனிடல்)
- நெய் உற்பத்தி விற்பனை.
- நாட்டுமுட்டை விற்பனை.
- தவிடு, பிண்ணாக்கு போன்ற அடர்வுத் தீவனவிற்பனை.
- செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நடவடிக்கை.
- **Co3** புல்விற்பனை.(உயர் உற்பத்தி புல்விற்பனை)

## வெளியீடுகள் –

- மாதந்தம் பால் கொள்வனவு, விநியோகம் 13410 லீற்றர் ஆகும்
- பெண்களின் பொருளாதார தலைமைத்துவமும், தொழில் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
- பால் உற்பத்திப் பொருட்கள் வவுனியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது இதில் வெளிமாவட்டங்களிற்கும் விநியொகம் செய்யப்படுகின்றது.
- நல்லின கால்நடைகள் உற்பத்தி அதிகரித்துள்ளது.
- கால்நடைக்குரிய நல்லின உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது. செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நடவடிக்கையில் இலங்கையில் பெண் ஈடுபட்டுள்ளார்.

ஆக்கம்
CHA, வவுனியா.



ஆன இயந்திரங்களைப் பாவிக்கும் போது கார, அமிலங்கள் தாக்கமடைவதால் துருபிடியாத உருக்கு (Stainless Steel) இயந்திரங்களையே பாவிக்கிறார்கள். பழரசங்கள் அடைக்கும் போத்தல;

Autoclave இயந்திரத்தில் போட்டு நீராவி மூலம் அவிக்கப்படுகிறது.

யாழ் குடாநாடடைப் பொறுத்தவரையில் பாரிய ஓர் இடப்பெயர்வுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொழிற்சாலை 'ஜசுபி' ஆகும். இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட பின்பு பழச்செய்கை உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு நியாயமான விலைக்கு பழங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதனால் அவர்களுக்கு தொடர் வருமானம் கிடைக்கிறது.

யாழ் குடாநாட்டில் இத் தொழிற்சாலை மக்களுக்குப் பெரும் சேவை செய்து ருவது மறுக்கமுடியாதது.அவர்களின் உற்பத்திப் பொருட்களைத் தென்னிலங்கை மக்கள் விரும்பும் அளவிற்கு யாழ் மக்கள் விரும்பாமை பெரும் கவலைக் குரியதாகும்.யாழ் குடாநாட்டு வளத்தையே முற்றுமுழுதாக மூ லப்பொருள்களாகக் கொண்டு இயங்கும் இத் தொழிற்காலையைக் கைகொடுத்துத்தூக்க வேண்டியது யாழ் மக்களுடையதும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களினதும் பொறுப்பு ஆகும்.

ஆக்கம்
S. R. சுகந்தன், யாழ்ப்பாணம்.

## எதிர்காலத்திட்டங்கள்.

- மரக்கறிகள் மலிவான காலங்களில் வாங்கி அரிந்து காயவிட்டு பங்கசு (பூஞ்சனம்) வராமல் பாதுகாத்து பொதி செய்து விற்பது.
- தக்காளி, பூசணி போன்றவற்றை மரக்கறிகளுடன் சேர்த்து மார்மமைற் (Marmite) தயாரிப்பது.
- உள்ளூரில் பால் கொள்வனவு செய்து டெல்ரா றொபி செய்வது.
- பழங்களிலிருந்து சாறு எடுத்து சுவையூட்டிச்சோடா தயாரிப்பது.
- சுத்தமான பருகும் நீர், போத்தலில் அடைத்து விநியோகிப்பது.
- வேலைவாய்ப்பு

## எதிர்நோக்கும் பிரச்சினைகள்

- வன்னி, தென்னிலங்கைப் பிரதேசங்களுக்கு தயாரிப்புக்கள் செல்லாமை.
- பொருள்களின் கேள்வி, தரம், விலை என்பன தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுடன் ஒப்பிடும் போது ஜசுபி' தயாரிப்புக்கள் தரமானவையாகவும் விலை குறைவாகவும் இருந்தும் யாழ் மக்கள் பெரிதும் வெளிப்பொருள்களையே நாடுதல்.
- உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விநியோகிப்பதற்கு போதுமான வாகன வசதியின்மை.
- அடைப்பதற்கு பாவிக்கப்படும் போத்தல்கள் கொழும்பில் இருந்து வருவிக்கப்பட்டுவதால் அவற்றிற்கான செலவுகள் அதிகமாக உள்ளன.
- நீண்ட காலமாக யாழ் மண்ணில் நிலவி வரும் யுத்த சூழ்நிலைகளாலும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளாலும் போதிய சந்தை வசதிகள் இல்லாமை.

CONSORTIUM OF
CHA
HUMANITARIAN AGENCIES
(GTE) LIMITED
ISO 9000 : 2000 Certified

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு
86, றொஸ்மிட் பிளேஸ் கொழும்பு–07
தொலைபேசி :- +9411 4 610943/4
மின்னஞ்சல் –feedback@cha.lk
இணையம் :- www.humanitarian-srilanka.org